# "OVER FORTY YEARS BEFORE THE FOOTLIGHTS."

## PART 2.

BY

RAO BAHADUR. P. SAMBANDAM, B.A., B.L.

*Author of:*

The Two Sisters, *Galava*, Manohara, The Curse of Urvasi, The Merchant of Vanipura, Fate and Love, Simhalanatha, Pushpavalli, Amaladitya, Magapathi, Farces, Siruthondar, The Golden Fetters, True Love, The Bandit Chief, Bricks-Between, At Any Cost, The Fair Ghost, The Wedding of Valli, The Eye of Love, Vijayarangam, As you like it, Ratnavali, Lord Buddha, The Tragedy of Silence, The Good Fairy, Geetha Manjari, The True Brother, Malavikagnimitra, Chandrahari, The Demon Land, Sabapathy Part I, The Pongal Feast or Sabapathy Part II, A Rehearsal or Sabapathy Part III, Sabapathy Part IV, Blessed in a Wife, The Dancing Girl, Subbadra-Arjuna, Karna the Giver, Sahadeva's Stratagem, The Surgeon General's prescription, Vichu's Wife, Sakuntala, Vikramorvasi, The *Point* of View, The Two Selves, The Tragic Denouement, The Sub-Assistant Magistrate of Sultanpet, Harischandra, Blind Ambition, Markandeya, Sarangadhara, The Two Friends, The Treachery of Kalappa, As We Sow So We Reap, etc., in Tamil; and Harischandra, and Yayathi in English.

FIRST EDITION.

Madras:

PRINTED BY THE PEERLESS PRESS,

13, THAMBU CHETTY STREET, G. T.

[All Rights Reserved. 1933 Price per Copy Re. 1.50

# நாடகமேடை நினைவுகள்

## இரண்டாம் பாகம்

ராவ்பஹதூர்

## ப. சம்பந்த முதலியார், பி.ஏ., பி.எல்.,

அவர்களால் எழுதப்பட்டது.

இந்நூலாசிரியரால் இயற்றப்பட்ட மற்றத் தமிழ் நூல்கள்:—

லீலாவதி – சுலோசனை, சாரங்கதரன், மகபதி, மனோஹரன், நற்குல தெய்வம், ஊர்வசியின் சாபம், இடைச்சுவர் இருபுறமும், என்ன நேர்ந்திடினும், விஜயரங்கம், காதலர் கண்கள், கள்வர் தலைவன், தாசிப்பெண், மெய்க்காதல், பொன் விலங்குகள், சிம்ஹளநாதன், விரும்பிய விதமே, சிறுத்தொண்டர், காலவரிஷி, ரஜபுத்ரவீரன், உண்மையான சகோதரன், ரத்னாவளி, புஷ்பவல்லி, கீதமஞ்சரி, பிரஹசனங்கள், அமலாதித்யன், சபாபதி முதற்பாகம், பொங்கல்பண்டிகை அல்லது சபாபதி இரண்டாம் பாகம், ஓர் ஒத்திகை அல்லது சபாபதி மூன்றாம் பாகம், சபாபதி நான்காம் பாகம், வள்ளிமணம், பேயல்ல பெண்மணியே, புத்த அவதாரம், விச்சுவின் மனைவி, வேதாள உலகம், மனைவியால் மீண்டவன், சந்திரஹரி, சுபத்திரார்ஜுனா, கொடையாளி கர்ணன், சஹதேவன் சூழ்ச்சி, நோக்கத்தின் குறிப்பு, இரண்டு ஆத்மாக்கள், சர்ஜன் ஜெனரல் விதித்த மருந்து, மாளவிகாக்னிமித்ரம், விபரீதமான முடிவு, சுல்தான்பேட்டை சப் அசிஸ்டெண்ட் மாஜிஸ்டிரேட், சகுந்தலை, காளப்பன் கள்ளத்தனம், விக்கிரமோர்வசி, முற்பகற் செய்யின் பிற்பகல் விளையும், முதலியன.


முதற் பதிப்பு

சென்னை 'டியர்லெஸ்' அச்சுக்கூடத்தில்

அச்சிடப்பட்டது.

1933


காபிரைட்.]

[விலை ரூபாய் [illegible]-50

INSCRIBED

to

THE BELOVED MEMORY

of

MY PARENTS

**P. VIJIARANGA MUDALIAR**

and

**P. MANICKAVELU AMMAL**

and

MY FRIEND

**C. RANGAVADIVELU**

# பூர்வ காலத்து உற்சவங்கள்

நமது தாய் நாடான இந்தியாவானது கோயில்கள் நிறைந்த தேசம், (Land of Temples) என்று அயல் நாட்டார்களால் புகழப்பட்டிருக்கிறது.

மிகவும் பூர்வீக காலத்தில் இருந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் வட இந்தியாவிலிருந்த மொஹஞ்சதரோ ஹாரப்பா முதலிய நசித்துப்போன பட்டணங்களில் சிவலிங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்ட போதிலும், அவைகளுக்குப் பிரத்தியேகமாகக் கோயில்கள் கட்டப்பட்டன வென்று சொல்வதற்குப் போதுமான ஆதாரமில்லை.

பிற்காலத்தில் இந்தியாவுக்கு வந்த ஆரியர்கள், தெய்வங்களுக்கு யாகங்களை இயற்றிப் பூசித்து வந்தனரேயன்றி கோயில்களைக் கட்டி அவைகளில் தெய்வங்களின் உருவங்களை வைத்துத் தொழுததாகத் தெரிகிறோமில்லை

வட இந்தியாவில் பௌத்தர் காலத்துக்குப் பிறகு தான் ஆலயங்கள் ஏற்பட்டதாக அறிகிறோம். தென்னிந்தியாவில் தமிழகத்தில், தொல்காப்பியர் காலத்தில் தமிழர்கள் அக்காலம் வணங்கி வந்த தெய்வங்கள், ஆலயங்களில் வைக்கப் பட்டிருந்தன என்பதற்குச் சந்தேகமில்லை. நாற்பாங்காகப் பகுக்கப் பட்ட நிலங்களில், ஒவ்வொரு நிலத்திற்கும் இன்னின்ன தெய்வம் பிரதானம் என்று கூறப்பட்டிருக்கிறது. அன்றியும் இவைகளுக் கெல்லாம் மேலான தெய்வமாகச் சிவபெருமான் வணங்கப்பட்டனர் என்று நாம் ஊகித்தறிய இடமுண்டு.

சிலப்பதிகார காலத்தில் சிவபெருமானுக்கும் முருகக் கடவுளுக்கும் கோயில்கள் இருந்தன என்பதற்குச் சந்தேகமில்லை. இவைகளுக்குக் 'கோட்டங்கள்' என்று பெயர். அவைகளில் உற்சவங்களும் நடைபெற்றன என்பதற்கு ஐயமின்று. ஆயினும் அந்த உற்சவங்கள் எவ்வாறு நடத்தப்பட்டன, எப்பொழுது நடத்தப் பட்டன, என்று நாம் விவரமாய்க் கூறுவதற்கில்லை. ஆயினும் அக்

காலத்தில் நடந்த இந்திர விழாவைக் கொண்டு மற்ற விழாக்கள் இப்படித்தான் நடந்திருக்க வேண்டுமென்று நாம் ஒருவாறு ஊகித்தறியலாம்.

இந்த இந்திரவிழா ஒரு அமாவாசையன்று ஆரம்பித்து மறு அமாவாசை வரையில், அதாவது 28 நாட்கள் நடந்ததாக அறிகிறோம்; இதன் ஆரம்பத்தில், இந்திரனது கற்பகத்தரு இருக்கும் கோட்டத்தில் இந்திரத்துவசம் நாட்டப்பட்டது; இதில் அவரது வாகனமாகிய ஐராவதத்தின் படம் எழுதப்பட்டது. இத்துவசம் விழாவின் முடிவில் வீழ்த்தப்பட்டதாம். (தற்காலத்தில் சிவாலயங்களில் நடைபெறும் துவஜா ரோகணம், துவஜ அவரோகணம் என்னும் சடங்குகளை இத்துடன் ஒத்திட்டுப்பார்க்க). இந்த விழாவின் முடிவில் எல்லோரும் கடலாட்டுக்காக கடலருகிற் சென்றதாக அறிகிறோம் (தற்காலத்தில் பிரம்மோற்சவத்தின் கடைசியில் தீர்த்தவாரி நடப்பதை ஒத்திட்டுப் பார்க்க - திருவாங்கூர் ராஜ்யத்தில் பத்மநாபசுவாமியின் பிரம்மோற்சவ கடைசியில் மகாராஜா உட்பட எல்லோரும் ஆறாட்டு (ஆறு + ஆட்டு) என்னும் உற்சவத்திற்குக் கடற்கரைக்குப் போவதை ஒத்திட்டுப் பார்க்க.)

கௌதமபுத்தர் நிர்வாணமடைந்த பிறகு சில நூற்றாண்டுகள் அவரது என்பு, பல் முதலியனவும், அவரது பாதச் சிலைகளும் போதி விருட்சம் முதலியனவும், பௌத்தர்களால் ஆராதிக்கப்பட்டன. அதன்பிறகுதான் அவரது உருவம் ஆராதிக்கப்பட ஆரம்பிக்கப்பட்டது. புத்தமதத்தைச் சார்ந்த அசோக சக்ரவர்த்தி காலத்தில் புத்தமதத்தைச் சார்ந்த மூன்று விதத் திருவிழாக்கள் நடந்தேறியதாக நாம் அறிகிறோம்.

அவரது நான்காவது சிலாசாசனத்தில் யானைத் திருவிழா, தேர்த் திருவிழா, லட்ச தீபம் எனும் மூன்று திருவிழாக்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. யானைத்திருவிழாவில் புத்தரது சின்னம் (Relic) வைக்கப்பட்டபேழை யானையின் முதுகில் வைக்கப்பட்டு சகல வைபவங்களுடன் ஊர்வலம் வந்தது போலும்; தற்காலமும் இலங்கைத்தீவில்

கண்டி எனும் நகரில் இத்திருவிழா கொண்டாடப்படுகிறது இதற்குப் 'பரிஹாரா' (பிராகாரம்?) என்றுபெயராம் ஒரு பெரியயானையின் பிடரில் புத்தரது பல் வைக்கப்பட்ட பெட்டியானது ஏற்றப்பட்டு, சகல வைபவங்களுடன் வருடந்தோறும் ஒருமுறை ஊர்வலமாகக் கொண்டு போகப்படுகிறது. (இதனுடன் தற்காலத்திய யானை வாகன உற்சவத்தை ஒத்திட்டுப் பார்க்க.)

தேர்த்திருவிழாவும் அப்படியே நடந்தேறியிருக்கலாம். (தற்காலத்திய தேர் உற்சவத்தை ஒத்திட்டுப்பார்க்க)

லட்சதீபம் என்பது புத்தரது ஸ்தூபங்களில் அவர் பிறந்த நாளில் ஆயிரக்கணக்கான தீபங்களை ஏற்றி அந்த ஸ்தூபங்களை ஜனங்கள் வலம் வந்ததாக நாம் உணர்கிறோம். (தற்காலத்தில் சிவாலயங்களில் நடந்தேறும் லட்ச தீப உற்சவங்களை இதனுடன் ஒத்திட்டுப் பார்க்க.)

சாணக்கியர் இயற்றிய அர்த்த சாஸ்திரத்தில், கோயில்கள், விக்கிரங்கள், உற்சவங்களைப் பற்றி எழுதியிருக்கிறார். இவரது காலம் கி. மு. நான்காம் நூற்றாண்டு.

கி. பி. 399-413- இல் இந்தியாவில் யாத்திரை செய்த பாஹியன் எனும் சீன தேசத்து யாத்திரீகர் இத்தேசத்தில் விக்கிரகங்கள் வைத்த தேர்த்திருவிழாக்கள் நடந்ததாகக் கூறியிருக்கிறார்.

கி. பி. 640 -ஆம் ஆண்டில் ஹர்ஷ சிலாதித்யன் சிவபெருமானுக்கு உற்சவம் நடத்தியதாக சொல்லப்பட்டிருக்கிறது.

இனி நாயன்மார்கள் காலத்தில் (சுமார் கி. பி. 700-ஆண்டில்) சிவபெருமானுக்கு நடந்தேறிய உற்சவங்களைப் பற்றி கூறுவோம்.

மூவர் பாடல்களில் ஓரிடத்திலும் பிரம்மோற்சவம் என்று குறிப்பிடப்படவில்லை. நான் அறிந்தவரையில், எல்லாம் மாதஉற்சவங்களே குறிக்கப்பட்டிருக்கின்றன.

திருஞான சம்பந்தர் திரு மயிலையில் பூம்பாவையை எழுப்பும் தருணம் பாடிய பதிகத்தில் அடியிற்கண்ட உற்சவங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன;—

**1. ஓண விழா:** இது ஐப்பசி மாசம் நடப்பதெனக் [illegible]டிருக்கிறது. மலையாளத்தில் இது மிகவும் சிறப்பாய்க் கொண்டாடப் படுகிறது, தற்காலம் இது அவர்களுக்குப் புதுவருஷ தினமாம்.

**2. கார்த்திகை நாள்:** இது கார்த்திகை மாதத்தில் நடப்பதாம். இதில் பல விளக்குகள் ஏற்றப் படுவதையும் கூறியிருக்கிறது. தற்காலமும் கார்த்திகை தீபத்தன்று நம் நாட்டில் விளக்குகள் இல்லந்தோறும் அதிகமாக வைப்பதைக் காண்க. கோயில்களிலும் வரிசை வரிசையாக ஏற்றப்படுகின்றன.

**3. ஆதிரை நாள்:** இது மார்கழி மாசம் நடக்கும் திருவாதிரை உற்சவத்தைக் குறிக்கிறது.

**4. தைப் பூசம்:** தைமாசம் நடப்பது. தற்காலம் இச்சமயம் தெப்பல் உற்சவம் நடப்பதைக் கவனிக்க.

**5. மாசிக் கடலாட்டு:** இது மாசி மகத்தன்று நடக்கும் திரு விழாவாம். சுவாமி கடலுக்கு ஸ்நானத்திற்காகக் கொண்டு போயிருக்க வேண்டும். (தற்காலமும் இது நடப்பதைக் கவனிக்க)

**6. பங்குனி உத்திர நாள்:** தற்காலம் பங்குனி மாசம் பல சிவாலயங்களில் பத்து நாள் பிரம்மோற்சவம் நடைபெறுகிறது; ஆயினும், பூர்வம் '**பங்குனி உத்திர நாள்**' என்று குறிப்பிட்டிருக்கிறது கவனிக்கத் தக்கது.

**7 அட்டமி நாள்:** அஷ்டமி நாள், இது எந்த. மாசம் என்று தெரியவில்லை.

**8. பொற்றும்பு:** என்று ஒரு உற்சவம் குறிப்பிடப் பட்டிருக்கிறது. இது இன்னதென்று அர்த்தமாகவில்லை

**9. பெருஞ் சாந்தி:** என்று ஒரு உற்சவம் கூறப் பட்டிருக்கிறது. அக்காலம் சாந்தி உற்சவம் என்று ஒன்று நடந்தது போலும்; (தற்காலமும் உற்சவ சாந்தி என்று நடைபெறுகிறதை ஒத்திட்டுப் பார்க்க)

மேற் கூறிய உற்சவங்களெல்லாம் வருடந்தோறும் சில மாசங்களில் ஒரு முக்கிய தினத்தில் நடக்கும் உற்சவங்கள் எனக் குறிக்கத் தக்கது. (பிரம்மோற்சம் எனப்

பத்து நாட்கள் தற்காலம் நடைபெறும் உற்சவம் இதில் குறிக்கப்படாதது கவனிக்கத்தக்கது)

கோயில்களிலுள்ள கல்வெட்டுகளில் பல மாச உற்சவங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன; உதாரணமாக— 1919 ௵ வெளியிடப்பட்ட சிலாசாசனங்களில் 432 எண்ணுள்ளதில், ஆடி, புரட்டாசி மாச உற்சவங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. நான் ஆராய்ந்து பார்த்த வரையில் பிரம்மோற்சவம் என்பது ஒரு சிவாலயத்து சிலாசாஸனத்திலும் குறிப்பிடப்படவில்லை.

திருவாரூரில் உள்ள சிலா சாசனத்தில் அந்த ஆலயத்தில் வருடாந்தரம் நடக்கவேண்டிய முக்கிய உற்சவங்கள் எல்லாம் குறிக்கப்பட்டிருக்கின்றன. ஆயினும், தற்காலம் நடைபெறும் பிரம்மோற்சவம் குறிக்கப்படவில்லை.

**வசந்தோற்சவம்:—** சிலாதித்யன் (ஸ்ரீஹர்ஷர்) (கி. பி. 7-ஆம் நூற்றாண்டு) காலத்தில் கொண்டாடப்பட்டது. இந்திரோற்சவமும் கொண்டாடப்பட்டது.

**திருவிடைமருதூரில்** உள்ள இரண்டு கல்வெட்டுகளில் தைப்பூச உற்சவம் குறிக்கப்பட்டிருக்கிறது.

கரூரில் உள்ள ஒரு கல் வெட்டில் உள்ளி விழா என்று ஒரு உற்சவம் குறிக்கப்பட்டிருக்கிறது.

1913-ஆம் வருடத்திய 482-ஆம் கல் வெட்டில் படிவேட்டை (பாடி வேட்டை அல்லது பரி வேட்டை) உற்சவமும், தோப்புத் திரு நாள் (வன போஜன உற்சவம்) என்ற உற்சவமும் குறிக்கப்பட்டிருக்கின்றன.

1913-ஆம் வருடத்திய 269-ஆம் கல்வெட்டில் சிவகாமசுந்தரிக்கு புளியிடு திரு நாள் குறிக்கப்பட்டிருக்கின்றது.

அன்றியும் இவ் வருஷத்திய 275-ஆம் கல வெட்டில் உற்சவ விக்கிரஹங்கள் கடலுக்குக் கொண்டு போவதைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறது.

மேற்குறித்த உற்சவங்கள் எல்லாம் ஏறக்குறைய பௌர்ணமி தினங்களில் நடப்பன என்பது கவனிக்கத் தக்கது. (தற்காலம் சிவாலய பிரம்மோற்சவங்கள் வளர்பிறையில் ஆரம்பித்து பௌர்ணமி யன்று முடிவது கவனிக்கத் தக்கது. ஆதியில் கோயில்களில் மூல விக்கிரஹங்

கள் தான் ஆராதிக்கப்பட்டு வந்திருக்க வேண்டும். பிறகே உற்சவ விக்கிரஹங்கள் வழக்கத்தில் வந்திருக்கவேண்டும். கி. பி. 1300-1325 இல் ஆண்ட பிரதாபருத்திரர் எனும் அரசர் ஆண்ட காலத்தில் உற்சவ விக்ரஹங்களை ஏற்படுத்தியதாக அறிகிறோம்.

## தற்கால சிவாலய உற்சவங்கள்

சைவ ஆகமங்களின்படி சிவாலய உற்சவங்கள் நான்கு வகைப்படும்:—

I. **சாகல்யம்:** இது துவஜாரோகணம் முதல் தீர்த்த வாரி வரையில் செய்யப்படும் உற்சவத்தின் பெயராம். தற்காலம் சிவாலயங்களில் நடத்தப்படும் பிரம்மோற்சவங்கள் இப்பகுதியினவாம். இது ஒன்பது பிரிவினதாகும்:—

1. சவுரம் —27 நாட்கள்
2. சாத்திரம் —17 ,,
3. சாவித்ரம் —15 ,,
4. கௌமாரம் --13 ,,
5. தைலீகம் — 9 ,,
6. பவுளம் — 7 ,,
7. பௌதிகம் — 6 ,,
8. கணம் — 3 ,,
9. சைவம் — 1 ,,

II. **பாவளம்:** துவஜாரோகணம் செய்விக்காமல் தீர்த்த வாரி வரையில் உற்சவம் செய்வித்தல் பாவளமெனப்படும்.

III. **சாந்தம்:** துவஜாரோகணமும் காலை உற்சவமும் செய்விக்காமல் இரவில் மாத்திரம் உற்சவம் செய்வித்தல் சாந்தமெனப்படும்.

IV. **மாங்கல்யம்:** துவஜாரோகணம் முதலியன இல்லாமல், காலையில் மாத்திரம் உற்சவம் நடத்துதல் மாங்கல்யம் எனப்படும்.

**பிரம்மோற்சவம்:**

ஒவ்வொரு சிவாலயத்திலும் வருடந்தோறும் தற்காலம் நடக்கும் பெரிய உற்சவத்திற்கு பிரம்மோற்சவம் என்று பெயர். இதைபபற்றி இனி சிறிது ஆராய்வோம்

இந்த பிரம்மோற்சவம், எல்லா சிவாலயங்களிலும் ஒரே மாசத்தில் ஆரம்பித்து முடிக்கப்படுவதன்று. இவ் விஷயத்தில் சில பெரிய சிவாலய பிரம்மோற்சவம் நடை பெறும் மாசங்கள் இங்குக் குறிப்போம் :—

**சித்திரை** : மதுரை, பவானி, தஞ்சாவூர், திருவை யாறு, திருக்காளர், திருக்கடையூர், திருக்கழுக்குன்றம், சீர்காழி, திருமயம், அச்சிறுபாக்கம், அண்டமி, அவிநாசி, திருவையாறு, திருக்கச்சூர், திருச்சூர், திருமுல்லை வாயில்.

**வைகாசி** : சேலம், திருவிடை மருதூர், கண்டியூர், சங்கர நாராயணர் கோயில், ஊற்றத்தூர், திருப்பாசூர்.

**ஆனி** : சிதம்பரம், ஆவுடையார் கோயில், திருவா னைக்கா (சம்புகேஸ்வரம்) திருநெல்வேலி, திருப்புவணம்.

**ஐப்பசி** : மாயவரம்,

**கார்த்திகை** : திருவண்ணாமலை.

**மார்கழி** : சிதம்பரம்

**தை** : அனகாவூர், திருவோத்தூர், அவளிவணல் லூர், திருவாவடுதுறை, திருவிடை மருதூர்.

**மாசி** : காளஹஸ்தி, ராமேஸ்வரம், திருஒற்றியூர், விருத்தாசலம், திருமழபாடி, கும்பகோணம், வைதீஸ்வரர் கோயில், கஞ்சனூர்.

**பங்குனி** : ஆரூர், காஞ்சி, திருமயிலை, கருவூர் ஆனிலை, திருப்பனந்தாள், பேரூர், திருப்பாலைவனம்.

மேற்குறித்த பிரம்மோற்சவங்களை ஆராயுமிடத்து அவைகள் பெரும்பாலும் மழையில்லாத தை முதல் வைகாசி வரையிலுள்ள மாதங்களில் தான் அநேக சிவால யங்களில் நடைபெறுகின்றன என்றறிகிறோம். இம் மாதங்களில் தான் சாதாரணமாக புஷ்பங்கள் பழங்கள் முதலியன அதிகமாய்க் கிடைக்கும் என்பதை கவனிக்க வும். சாதாரணமாக மழை பெய்யும் புரட்டாசி, அற்பிசி, கார்த்திகை, மார்கழி மாதங்களில் அவ்வளவாக நடப்ப தில்லை. (இவைகள் சாதூர் மாசங்களில் அடங்கியவை என்பது கவனிக்கத்தக்கது.)

தேவிக்கு உற்சவம் ஆடி மாதம் நடைபெறுகிறது ஸ்கந்த சஷ்டி யாகிய சுப்பிரமணியர் உற்சவம் அற்பிசி மாசம் நடைபெறுகிறது.

இனி பல சிவாலயங்களில் நடக்கும் பிரம்மோற்சவத்தின் பொதுவான விஷயங்களை சற்று கவனிப்போம்.

ஸ்தம்பப் பிரதிஷ்டை: பிரம்மோற்சவம் ஆரம்பிப்பதற்கு சில தினங்களுக்கு முன்பாக, ஒரு நாள் நல்ல லக்னம் பார்த்து, ஸ்தம்பப் பிரதிஷ்டை செய்வார்கள்-அதாவது பந்தக்கால் நடுதலாம். (நம்மில் நடக்கும் கலியாணத்திற்கும் ஆரம்பத்தில் ஸ்தம்பப் பிரதிஷ்டை நடைபெறுவதைக் கவனிக்கவும்.) அதன் பிறகுதான் பந்தல்கள் முதலியன போட்டு கோயில் மராமத்து செய்து வெள்ளையடித்து மாணிக்கப்பட்டை போடுவார்கள். (மாணிக்கப் பட்டை என்பது சுவர்களில் வெண்மையும் சிவப்பும் கலந்த பட்டைகளை அடிப்பதாகும்) கோயிலைச் சார்ந்த எல்லா வீடுகளுக்கும் இந்த மாணிக்கப்பட்டை அடிக்கப்படும். (இதைக் கண்டவுடனே இந்த சொத்து தேவஸ்தானத்தைச் சார்ந்ததுஎன்று எல்லோரும் எளிதில் அறியக்கூடும்.)

அனுக்ஞை: இப்பதத்திற்கு "உத்திரவு" என்று அர்த்தமாகும். இது சாதாரணமாகக் கோயிலிலுள்ள பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக நடைபெறும். அதாவது பிள்ளையாரைப் பூசித்து பிரம்மோற்சவம் நடத்த அவரது உத்திரவைப் பெறுவதாகும். சில பெரிய ஆலயங்களில் அனுக்ஞை விநாயகர் என்றே ஒரு விநாயகர் இருப்பார். மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயிலில் ஸ்வாமி சந்நிதிக்கு அருகில் தென்புறம் இருக்கும் விநாயகருக்கு அனுக்ஞை விநாயகர் என்றே பெயர். திரு ஒற்றியூரிலுள்ள ஒரு கல்வெட்டில் அங்கு "அனுக்கை விநாயகர்" என்று ஒரு விநாயகர் இருந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. 'அனுக்கை' என்பது அநுக்ஞை என்பதின் மருவாம். சில ஆலயங்களில் விக்நேஸ்வரர் பூஜை செய்துவிட்டு, அனுக்ஞையை, மூலவர் சந்நிதியில் நடத்துவதுமுண்டு. (இவ் வழக்கம் மயிலாப்பூரில் காண்க)

குறிப்பு:— அண்ணாமலையில் துர்க்காப்பாள் உற்சவமும் பிடாரி உற்சவமும் முதலில் நடந்தபின் பிரம்மோற்சவம் ஆரம்பமாகும்.

**அங்குரார்ப்பணம் :** பிரம்மோற்சவத்தின் முதல் நாளுக்கு முந்திய தினம் சாயங்காலம், அங்குரார்ப்பணம் எனும் சடங்கு நடைபெறும். அங்குரார்ப்பணம் என்றால் 'பாலிகை தெளித்தல்' என்று அர்த்தம் செய்யப்பட்டிருக்கிறது. அதாவது பாலிகைகளில், நவதான்யங்கள் இடுதல். (ஹிந்துக்களில் எல்லா சுபகாரிய ஆரம்பத்திலும் இந்த சடங்கு நடப்பதைக் கவனிக்கவும்.) மேற்கண்ட காரியத்தைச் செய்யும் பொருட்டு அன்று சாயங்காலத்திற்கு மேல் சண்டேஸ்வரர் புறப்பட்டு, அருகிலுள்ள தோட்டத்திற்கோ, கழனிக்கோ போய், மிருத்சங்காஹரணம் செய்து கொண்டு வருவார் - அதாவது: 'புற்று மண்' எடுத்துக் கொண்டு வருவார். இதைக் கொண்டு பாலிகைகளில் நவதான்யங்கள் போடுவதற்காக அடியில் இம்மண்ணைத் தூவுவார்கள்; அன்றியும், யாகசாலையும் ஏற்பாடு செய்யப்படும்.

**வாஸ்துசாந்தி :** இது வாஸ்து புருஷனை சாந்தி செய்தல் என்று அர்த்தமாகும்; அதாவது கிரஹ தேவதையை பூஜித்தல் என்பதாம். கோயிலை ஒரு வீடாகக்கொண்டு அதற்குரிய கிரஹதேவதையை சாந்தி செய்வதாகும்.

இச்சடங்கின் முடிவில், ஒருபெரிய வைக்கோல் புரியை ஒரு பக்கம் கொளுத்தி, மாடவீதிகளில் இழுத்துக்கொண்டு போவார்கள்.* இதன்பொருள் :—மாடவீதிகளையெல்லாம் அக்னியைக்கொண்டு பரிசுத்தம் செய்தல் என்பதாம்: (பிரம்மோற்சவ காலத்தில், மாடவீதிகளில் ஏதாவது அசுபம் நேரிட்டால், மறுபடியும் இந்த மாதிரி அக்னியால் பரிசுத்தம் செய்த பிறகே ஸ்வாமி புறப்படுவதைக் கவனிக்கவும்)

**விநாயகர் உற்சவம் :** மேற்கண்ட கிரியைகள் எல்லாம் நடந்த பின், விநாயகர் உற்சவமாகும். இவர் மாடவீதிகளை முறையே வலம் வருவார். இந்துக்களுடைய

* சில கோயில்களில் வைக்கோலினால் ஒரு மனிதனைப் போல் செய்து இதைக் கொளுத்தி இழுத்துக்கொண்டு போகிற வழக்கம் உண்டு (வாஸ்து புருஷன் எனும் சொற்றொடரைக் கவனிக்க.)

எல்லாக் காரியங்களும் விநாயகரை முன்னிட்டு நடைபெறு வதைக் கவனிக்கவும்.

**துவஜாரோகணம்:** பிரம்மோற்சவத்தின் முதல் நாள் காலை இது நடைபெறும். துவஜாரோகணம் என்றால் கொடியேற்றுதல் என்று பொருள்படும். கர்ப்பக்கிர ஹத்தின் எதிரில் இருக்கும் உயரமான துவஜஸ்தம் பத்தில் சிவபெருமானுடைய கொடியை மந்திரங்களோடு ஏற்றுதலாம். இந்தக் கொடியில் ரிஷபம் முக்கியமாய் எழுதப்பட்டிருக்கும். (ரிஷபக்கொடியோன் எனும் பெய ரைக் காண்க.) அன்றியும் திரிசூலம் முதலிய சின்னங்க ளும் எழுதியிருக்கும். இக்கொடி சாதாரணமாக கோயி லுக்கு வெளியிலிருந்து பார்த்தாலும் தெரியும். இதைக் கண்டவுடன் ஊரிலுள்ள ஜனங்களுக்கெல்லாம் பிரம் மோற்சவம் ஆரம்பமாகிவிட்டது என்று தெரியும். (இந்திர விழாவில் இந்திர துவஜத்தைப் பற்றி முன்னால் கூறி யிருப்பதை ஒத்திட்டுப் பார்க்க.)

**முதல் நாள் உற்சவம்:** மேற் குறித்தபடி கொடி யேறியவுடன் முதல் நாள் உற்சவம் ஆரம்பமாகும். திரு மயிலை பிரம்மோற்சவத்தை உதாரணமாகக் கொண்டு அங்கு நடக்கும் பத்து நாள் உற்சவத்தையும் விவரிக் கிறேன். ஏறக்குறைய எல்லா சிவாலயங்களிலும் இதே மாதிரியாகத்தான் நடைபெறும்.

சைவ ஆகமப்படி பிரம்மோற்சவத்தில் காலை மாலை பஞ்ச மூர்த்திகளும் புறப்பாடாக வேண்டும். பஞ்ச மூர்த்தி களென்றால்:—1. விநாயகர் 2. வள்ளியம்மை தெய்வயானை சமேத சுப்பிரமணியர், 3. சோமாஸ்கந்த மூர்த்தி (பரம சிவனும் பார்வதியும் இடையில் சிறிய பால சுப்பிரமணிய ருடன் வீற்றிருக்கும் கோலம்) சோம + உமை + ஸ்கந்தர். சோமாஸ்கந்த மூர்த்தியின் இடையில் பால சுப்பிரமணியர் இருப்பது அலங்கார காலத்தில் தெரியாது, அபிஷேக காலத்தில் வேண்டுமென்றால் பார்க்கலாம்). 4. தனியம் மன் 5. சண்டேசுவரர். முதல் நாள் காலை உற்சவத்தில் பஞ்ச மூர்த்திகளும் பவழக்கால் சப்பரங்களில் புறப்பா டாகும்.

இது முதல் பத்து நாட்களும் உற்சவம் பூர்த்தியாகும் வரையில் காலை மாலைகளில், ஸ்வாமி உற்சவமாகுமுன், அஸ்திரராயர், மூன்பு மாட வீதிகளை வலம் வருவார். அஸ் திரராயர் என்றால் சிவபெருமானது ஆயுதமாகிய சூலம். இதை எடுத்துக் கொண்டு முதலில் மாட வீதியை வலம் வருவதற்கு முக்கிய காரணம், அவ் வீதிகளில் அசுபங்கள் ஒன்றும் இல்லாததை கவனிப்பதற்காக. அஸ்திரராயர் வலம் வந்த பிறகுதான் ஸ்வாமி புறப்பாடாகும். (வைஷ் ணவ ஆலய பிரம்ம உற்சவங்களில் மகாவிஷ்ணுவின் ஆயுத மாகிய சக்ரத்தாழ்வார் இதே மாதிரியாக தினம் வலம் வருவதை ஒத்திட்டுப் பார்க்க).

முதல் நாள் இரவு உற்சவத்தில், ஸ்வாமி ஸ்தல விருட்ச மாகிய புன்னைவிருட்ச வாகனத்தில் எழுந்தருளுவார். இச் சமயம், உமை மயில் வடிவாக ஸ்வாமியை பூசிப்பது போல அலங்காரம் செய்யப்படும். அம்மனுக்கு கற்பக விருட்சம் - சுப்பிரமணியருக்கு வேங்கை விருட்சம்.

ஒவ்வொரு நாள் உற்சவத்திலும் ஸ்வாமிக்கு அலங் காரம் முடிந்த உடன் தீப ஆராதனை ஆகி, ஸ்வாமி உள் பிராகாரம் சுற்றி வருவார். அப்படி வரும் பொழுது வட கிழக்கு மூலையிலுள்ள யாகசாலை எதிரில் நின்று ரட்சையை பெற்று பிறகே வாகனத்தின் மீது ஆரோகணிப்பார். ஸ்வாமியை வாகனத்தின் மீது ஏற்றும் பொழுது திரை போடப்படும். வாகனத்தின் மீது சரியாக பந்தனம் செய் யப்பட்டபின் திரையை நீக்கி தீப ஆராதனை செய்வார் கள். பிறகு வாகனத்துடன் கோபுர வாயிலுக்கு நடுவில் வரும் பொழுதும் பெரிய தீப ஆராதனை நடக்கும் (கற்பூ ரார்த்தியாக) இக்காட்சி மிகவும் அழகியதாயிருக்கும். கோபுர வாயில் காட்சியைக்காண வேண்டும்என்று பக்தர் கள் ஆயிரக்கணக்காக வெளியில் கூடி இருப்பார்கள்.

பிறகு கோயிலுக்கு எதிரிலுள்ள 16 கால் மண்டபத் தில் பஞ்சமூர்த்திகளும் ஒருங்கு சேர்வார்கள்; பிறகுசுவாமி மாடவீதி வழியாக பிரதட்சணம் வருவார் சகல வைபவங் களுடனும். ஆங்காங்குள்ள பந்தர்களில் மண்டபப்படி நடக்கும். சுவாமி ஈசான்ய மூலையில் வந்தவுடன் சகல

வாத்தியங்களும் நிறுத்தப்பட்டு மௌனமாக சந்நிதி வீதிக்கு எதிரில் வரும் வரையில் உற்சவம் நடத்தப்படும். இதற்குக் காரணம் ஒன்றும் விளங்கவில்லை. சிலர் இங்கு வானத்தில் சப்த ரிஷிகள் இருப்பதால் அவர்கள் பூஜையின் பொருட்டு மேளங்கள் நிறுத்தப்படுகின்றன என்று கூறுகின்றனர். இது இன்னும் ஆராயவேண்டிய விஷயம்.

16 கால் மண்டபத்திற்கு சுவாமி திரும்பி வந்தவுடன், மறுபடியும் தீபாராதனை, நைவேத்தியம் முதலியன நடைபெறும். பிறகு சண்டேசுவரர் முதலாகவும், அதற்கப்புறம் விநாயகர், சுப்பிரமணியர், தனியம்மன், சோமாஸ்கந்த மூர்த்தியை வலம் வந்து கோயிலுக்குள் போவார்கள். கடைசியாக சோமா ஸ்கந்த மூர்த்தி புகுவார். வாகனத்திலிருந்து இறக்கப் பட்டவுடன் சோமா ஸ்கந்த மூர்த்தியும் தனியம்மனும் சுப்பிரமணியரும், உட்பிர காரம் வலம் வருவார்கள். பிறகு அலங்கார மண்டபம் போய்ச் சேர்வார்கள்; அங்கு உற்சவக்காரர்களுக்கு நடக்க வேண்டிய பரியாதை நடந்த பின் மண்டபத்திருக்கதவு தாளிடப்படும்.

**இரண்டாம் நாள் உற்சவம்:** காலை சூரியப் பிரபை மாலை சந்திரப் பிரபை சுவாமிக்கு; அம்மனுக்கு கிளி வாகனம்; சுப்பிரமணியருக்கு அன்னவாகனம்.

**மூன்றாம் நாள்:** காலை அதிகார நந்தி வாகனம்; இது விசேஷ உற்சவம். அதிகாலையில் சுவாமி புறப்பாடாவார். 16 கால் மண்டபத்துக்கு சுவாமி வரும்பொழுது சூர்யரஸ்மி வாகனத்தின் மீது விழும். அம்மனுக்கு கந்தர்வி வாகனம். சுப்பிரமணியருக்கு கந்தர்வ வாகனம்- விநாயகருக்கு மூஷிகம். இரவு, முறையே பூதவாகனம் பூதகி வாகனம், தாரகாசுர வாகனம்.

**நான்காம் நாள்**; காலை புருஷா மிருக வாகனம், மாலை நாக வாகனம் சுவாமிக்கு: அம்மனுக்கு காமதேனு வாகனம், சுப்பிரமணியருக்கு மேஷ வாகனம்.

**ஐந்தாம் நாள்:** காலை சவுடல் விமானம்-இரவு விருஷப வாகனம். பிரபல உற்சவம். சுவாமி விருஷபத்

தின் மீது ஆரோகணிப்பது குறித்த லக்னப்படியாம். அம்மனுக்கு விருஷப வாகனம்; சுப்பிரமணியருக்கு மயில் வாகனம்; விநாயகருக்கு மூஷிக வாகனம்; சண்டேசுவரருக்கு சிறிய (பிரதோஷ) ரிஷப வாகனம்.

**ஆறாம் நாள்:** காலை பல்லக்கு பஞ்ச மூர்த்திகளுக்கும்- மாலை யானை வாகனம். சிவாலய யானை வாகனங்கள் நின்றபடி யிருக்கும், விஷ்ணு ஆலய யானை வாகனங்கள் உட்கார்ந்தபடி யிருக்கும்.

**ஏழாம் நாள்:** காலை ரதோற்சவம்- லக்னப்படி ரதா ரோகணம் பஞ்ச மூர்த்திகளுக்கும். மாலை சுவாமி ரதத்திலிருந்து கோயிலுக்கு எழுந்தருளுதல்; இரவு பஞ்ச மூர்த்திகளுக்கும் கேடய உற்சவம்.

**எட்டாம் நாள்:** காலை அறுபத்துமூவர் உற்சவம். காலை சுமார் ஒன்பது மணிக்கு திருஞான சம்பந்தர் புறப்பாடாகி குளக்கருகில் திருமஞ்சனம் அலங்காரமாகி, கோயிலுக்குபோய் சிவநேசச்செட்டியார்விக்கிரகத்துடனும் அங்கம்பூம்பாவை அஸ்தி வைத்தகுடத்துடனும்மறுபடியும்குளக்கரை போய், அங்கு மண்டபத்தில் பதிகம் பாட, பூம்பாவை பெண்ணுருவாம் காட்சி; பிறகு கோயிலுக்குவர 16 கால் மண்டபத்தில், சுவாமி அறுபத்துமூன்று நாயன்மார்களுடனும் திவ்யக்காட்சி; சுவாமிக்கு வெள்ளி விமானம் மற்ற மூர்த்திகளுக்கு சாதாரண விமானம். பின்பு எல்லா மூர்த்திகளும் மாடவீதி வலம் வருதல்; கடைசியில் எல்லா மூர்த்திகளும் திரும்பி 16 கால் மண்டபம் வந்த பின், எல்லோருக்கும் தூபதீப நைவேத்தியமாவது பார்க்கத்தக்கது. இரவு; சந்திரசேகரர் குதிரை வாகனம்—பார்வேட்டை. பிறகு பஞ்சமூர்த்தி கேடய உற்சவம்.

**ஒன்பதாம் நாள்:** காலை பஞ்சமூர்த்திகள் கேடய உற்சவம். மாலை 6 மணிக்கு பிட்சாடனர் திருக்கோலம். திருக்குளத்தின் மேற்கு புறம் வந்த உடன், கிருஷ்ண விக்ரஹம் மோகினி அவதாரத்துடன் வர, தீபாராதனை ஆகி, கோயிலுக்குத் திரும்புதல்; இரவு பஞ்சமூர்த்தி கேடய உற்சவம்.

**பத்தாம் நாள்:** பங்குனி உத்திரத்தன்று காலை நடராஜர் தரிசனம்; 16 கால்மண்டபத்தில்மட்டையடி சேர்வை. பிறகு பஞ்சமூர்த்திகள் உற்சவம். திருக்குளத்தில் தீர்த்தவாரி. இரவு உமை மயிலாக தவமிருக்கும் காட்சி. சுவாமி விருஷப வாகனக்காட்சி. திருக்கல்யாணம். பிறகு கைலாச வாகனம்- ஏகாந்த சேவை. (ஏகாந்த சேவையில் முகவீணை ஒன்று தவிர வேறு வாத்ய கோஷமில்லாமல் மாடவீதியை சுற்றி வரல்). சுவாமி கோயிலுக்கு வந்த பிறகு துவஜ அவரோகணம். (கொடி இறக்குதல்). சண்டேஸ்வரர் உற்சவமூர்த்தி; சுவாமிக்கு அணிந்த மாலையை சண்டேஸ்வரருக்கு அணிவித்து வலம் வருதல். ஆகமப்படி இதனுடன் பிரம்மோற்சவம் முடிந்தபடியாம்.

**பதினோறாம் நாள்:** காலை உற்சவமில்லை. மாலை பந்தம்பறி உற்சவம். இந்த உற்சவத்தில் சுவாமி திரும்பி சன்னதி வீதிக்கு வந்த பிறகு, அம்மன் பதினாறுகால் மண்டபத்திற்குப் போய்ச் சேருவார்கள் சகல வாத்யம் தீவட்டி முதலியவைகள் உட்பட. சுவாமியிடம் வெளிச்சமிரா து. (இதற்குத்தான் பந்தம்பறி என்று பெயர்). பிறகு சுந்தரமூர்த்தி நாயனார் இருவர்களுக்கும் இடையில் பலதரம் தூது செல்வார். தூது முடிந்த உடன் ஸ்வாமி தேவியின் ஊடலைத்தவிர்த்ததாக ஐதிகம். பிறகு சுவாமியும் அம்மனும் கோயிலுக்குள் போவார்கள். எனது ஆராய்ச்சியின்படி இந்த பந்தம்பறி உற்சவம் தியாகர் இருக்கும் கோயில்களில்தான் ஆதியில் நடைபெற்று வந்தது. (திருவொற்றியூர், திருவான்மியூர், திருக்கச்சூர் முதலிய கோயில்களில்.) பிறகுதான் மயிலை முதலிய சிவஸ்தலங்களில் இவ்வுற்சவத்தை எடுத்துக் கொண்டனர்.

**பன்னிரண்டாம் நாள்:** அதிகாலையில் யானை, பசு, கன்னிப்பெண்கள் முதலிய காலையில் பார்க்க வேண்டிய சகல நற் சகுனங்களுடன் சுவாமியும் அம்மனும் இருக்கும் பள்ளி அறை திறக்கப்படும். பிறகு தீபாராதனை ஆகும். குறிப்பு:—இப்படிப்பட்ட பிரம்மோற்சவங்கள் வட இந்தியாவில் சில க்ஷேத்திரங்களில் இல்லை என்பது கவனிக்கத் தக்கது.

மேலே குறித்தது மயிலாப்பூர் உற்சவத்தைப் பற்றியாம். பல சிவக்ஷேத்திரங்களில் சில வாகனங்கள் மாறுபடுவதுண்டு. இதற்கு இங்கு சில உதாரணங்களைக் குறிக்கிறேன். (1) காஞ்சீபுரத்தில் நான்காம்நாள் விருஷப வாகனம். ஐந்தாம் நாள் காலை அதிகார நந்தி வாகனம். (2) மதுரை முதலிய தென்னிந்திய க்ஷேத்திரங்களில் ரதோற்சவம் பத்து நாள் கழிந்தபின் கடைசியாக நடத்தப்படுகிறது, (3) திருப்பாதிரிப்புலியூரில் ஒன்பதாவது நாள் ரதோற்சவம். (4) பாபநாசம் முதலிய சிவ க்ஷேத்திரங்களில் பிரம்மோற்சவத்தின் கடைசியில் தெப்ப உற்சவம் நடைபெறுகிறது. (5) சில க்ஷேத்திரங்களில் (முக்கியமாக தென்னாட்டில்) பிரம்மோற்சவத்தில் பிட்சாடனருக்குப் பதிலாக கங்காளநாதர் புறப்பாடாவார். இன்னும் பல சிவ க்ஷேத்திரங்களிலும் வாகனங்கள் மாறுபட்டு வருகின்றன. அவைகளை யெல்லாம் இங்கு குறிப்பதென்றால் பெருகும். திருவாரூரில் சகல உற்சவ மூர்த்திகளுக்கும் பிரம்மோற்சவம் 37 நாட்கள் நடக்கின்றது; காஞ்சிபுரத்தில் பிரம்மோற்சவம் 13 நாட்கள்; மதுரையில் 15 நாட்கள். திருவண்ணாமலையில் தக்ஷிணாயன உற்சவம் என்று ஒரு உற்சவம் 10 நாள் நடை நடைபெறுகிறது ஆனிமாசத்தில்.

**விடையாற்றி உற்சவம்.** இதை சாதாரணமாக விடாயத்தி என்று சொல்வார்கள். விடையாற்றி என்றால் சிரம பரிகாரம் என்று பொருள்படும். பிரம்மோற்சவத்தில் சுவாமி அடைந்த களை தீருவதற்காக மண்டபத்திலேயே எழுந்தருளச் செய்து, தினம் தீபாராதனை முதலிய சோடச உபசாரங்கள் செய்வதாம்; பானக நிவேதனம். இது சாதாரணமாக பெரிய கோயில்களில் 3 நாட்கள் நடைபெறுவது வழக்கம்.

சில பெரிய சிவாலயங்களில் வருஷத்திற்கு இரண்டு மூன்று பெரிய உற்சவங்கள் நடத்தப்படுகின்றன. இவைகளும் சாதாரணமாக பத்து நாட்களுக்கு மேல் நடைபெறுகின்றன. இவைகளிலும் சுவாமிக்கு! வாகனங்கள்! உண்டு. உதாரணமாக:—1. மதுரையில் தெப்போற்சவம் என்று

பத்து நாட்கள் சுவாமிக்கு உற்சவம் நடைபெறுகிறது, அன்றியும் ஆவணி மூல உற்சவம் என்று பத்து நாட்கள் நடைபெறுகின்றது. இதற்குப் பிட்டு திருவிழா என்று பெயர்; பிட்டுக்காக சுவாமி மண் சுமந்த உற்சவம் இதில் விசேஷம். 2. சிதம்பரத்தில் மார்கழி மாதம் பத்து நாள் பிரம்மோற்சவத்தைப் போல் நடைபெறுகிறது.

சில சிவாலயங்களுக்கே உரித்தான சில உற்சவங்கள் உள. இவை மற்ற சிவாலயங்களில் கிடையா தெனலாம். உதாரணமாக:—

**1. மதுரையில்** மேற்சொன்ன மூன்று பெரிய உற்சவங்களில் நடைபெறும் திருவிளையாடல் உற்சவங்களைத் தவிர, மற்ற திருவிளையாடல் உற்சவங்கள் அவ்வப் போது நிகழ்கின்றன. உதாரணமாக கல்யாணைக்கு கரும்பு கொடுத்த உற்சவம் முதலியன. மதுரையில் ஆவணி மூல உற்சவத்தின்போது கருங்குருவிக்கு உபதேசம் செய்தது, நாரைக்கு முத்தி கொடுத்தது, மாணிக்கம் விற்றது, தருமிக்கு பொற்கிழி அளித்தது, உலவாக்கோட்டை அருளியது; பாணனுக்கு அங்கம் வெட்டியது, வளையல் விற்றது, விறகு விற்றது முதலிய திருவிளையாடல் உற்சவங்கள் நடைபெறுகின்றன.

**2. பெரிய காஞ்சீபுரம் :** ஏசல் உற்சவம் :—பங்குனி மாச பிரம்மோற்சவத்தில் 3-ஆம் நாள் ஏகாம்பரநாதர் கணேசருடனும், சுப்பிரமணியருடனும் சிறியகாஞ்சிபுரம் போய், அங்கு பதினாறுகால் மண்டபத்திற்கு எதிராக நிற்பார். கணேசரும், சுப்பிரமணியரும் ஸ்ரீ வரதராஜர் சன்னதிக்கு எதிரில் விளையாடுவதுபோல் வேடிக்கையாக பலவிதமாக சுற்றி வருவார்கள். (ஸ்ரீ வரதராஜர் வைகாசி உற்சவத்தில் 6-ம் நாள் யானை வாகனத்தில் எழுந்தருளி ஸ்ரீ ஏகாம்பரநாதர் கோயில் பதினாறுகால் மண்டபத்தில் இவ்வாறு ஸ்ரீ வரதராஜர் வேடிக்கையாய் சுற்றி வருவதை இதனுடன் ஒத்து உணர்க.) பரமசிவனும் மகாவிஷ்ணுவும் மைத்துனர்கள் என்கிற முறையில் இவ் உற்சவம் நடப்பதாகும்.

**3. ஜம்புகேஸ்வரம்:** *அல்லது திருவானைக்காவல் —பஞ்சப்பிரதட்சிணம். இது சித்திரை மாசம் நடப்பதாம்.*

**4. திருச்செங்காட்டங்குடி:** *அமுது படையல் உற்சவம், சித்திரைமாசம். இது சிறுத்தொண்டர் சுவாமிக்கு தன் மகனை அமுதாகப் படைத்ததைக் குறித்துச் செய்யப்படும் உற்சவமாம்.*

**5. திருக்கடையூர்:** *கால சம்ஹார உற்சவம். சித்திரைமாசம் இந்த மார்க்கண்டருக்காக யமனை பரமசிவம் காலாலுதைத்த ஐதிகத்தை உற்சவமாகக் கொண்டாடுவதாம்.*

**6. திருமாகாளம்:** *சோமயாஜியாக உற்சவம்.*

**7. புத்தூர்:** *பரமசிவம் அர்ஜுனனுக்கு பாசுபதாஸ்திரம் கொடுக்கும் உற்சவம். ஆடிமாசம்.*

**8. திருக்கோளிலி:** *சிவலோகம் காட்டிய விநாயகர் ரிஷபவாகனக்காட்சி. ஆவணிமாசம்.*

**9. திருக்கவர்:** *ரிஷிகளுக்குப் பஞ்சாட்சரம் உபதேசித்த உற்சவம். மார்கழி மாசம்.*

**10. திருவண்ணாமலை:** *திருவூடல் உற்சவம். மார்கழி மாசம். இங்கு பெண்ணையாற்று உற்சவம் என்று தை மாசம் நடைபெறுகிறது. இன்னும் வல்லாள ராஜன் உற்சவம் என்று ஒன்று நடைபெறுகிறது. பிள்ளையில்லாத வல்லாள ராஜனுக்கு ஸ்வாமி மகவாகிய ஐதிகத்தை ஒட்டியது; மாசி மாசம்.*

**11. தஞ்சாவூர்:** *பிரஹதீஸ்வரர் கோயில் பிரம்மோற்சவத்தில் எட்டாம் நாள் அஷ்டக் கொடி என்று ஒரு உற்சவம் நடக்கிறது. அன்றிரவு கோயிலில் குறவஞ்சி நாடகம் கோயில் தாசிகளால் ஆடப்படுகிறது.*

**12. திருவாரூரில்:** *புராணக் கூற்றின்படி தியாகராஜர் 361 லீலைகள் இயற்றியதாக அறிகிறோம். இவைகளில் பல, சில மாசங்களில் உற்சவங்களாக நடத்தப்படுகின்றன. இக் கோயிலில் உள்ள இரண்டாம் குலோத்துங்கச் சோழன் காலத்துக் கல்வெட்டில், அக்காலம் நடந்து வந்த 56 உற்சவங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. அன்*

றியும், ருத்திரபாத உற்சவம் என்று ஒரு உற்சவம் 10 நாட்கள் நடைபெறுகின்றன.

**13. பட்டீச்சரம்:** தஞ்சாவூர் ஜில்லா. முத்துப்பந்தல் உற்சவம். திருஞான சம்பந்தருக்கு முத்துப்பந்தல் கொடுத்த ஐதிகத்தைக் கொண்டாடுவதாகும். இது ஆனி மாசம் சாதாரணமாக நடப்பதாம்.

**14. காரைக்கால்:** காரைக்கால் அம்மையார் மாங்கனி உற்சவம். காரைக்கால் அம்மையார் சரித்திர சம்பந்தமான உற்சவம். ஆனி மாசம், காரைக்கால்-தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள ஸ்தலம்.

**15. திருவையாறு:** தஞ்சாவூர் ஜில்லா. இங்குள்ள தட்சிண கைலாசம் எனும் கோயிலில், அப்பர் காட்சி உற்சவம். ஆடி மாசம்.

இங்கு 18-ஆம் பெருக்கு உற்சவம் ஒன்று நடைபெறுகிறது. ஆடி மாசம் காவிரி நதி பெருகி வருவதைக் குறித்ததாம். ஆத்ம பூஜை உற்சவம்: சுவாமி தன்னைத் தானே பூசிக்கிறது; இது முக்கியமாக திருவையாற்றில் நடக்கிறது. சித்திரை மாசம்.

**16. ஆச்சிறுபாக்கம்:** பிரம்மோற்சவத்தில் இங்கு 5-ஆம் நாள் திருக்கல்யாணம். ஏழாம் நாள் கொன்றையடியில் திரிநேத்திரதாரி உற்சவர் விசேஷம். வைகாசி மாசம் நடக்கும் சம்பந்தர் உற்சவத்தில் என்பைப் பெண்ணாக்கல், ஓடம் விடுதல், ஜோதியிற் கலத்தல், முதலிய கிரியைகள், காட்சிகளாகக் காட்டப்படுகின்றன.

**17. திருஒற்றியூர்:** மகிழடிசேர்வை, இந்த உற்சவம் திருஒற்றியூரில் ஸ்வாமிக்கு மாசிமாசம் நடக்கும் பிரம்மோற்சவத்தில் 8-ஆம் நாள் நடப்பதாம். இவ்வூரில் சுந்தரமூர்த்தி நாயனார், சங்கிலி நாய்ச்சியாரைச் சந்தித்து, காதல்கொண்டு, அவரை விட்டுப் பிரிவதில்லையென்று மகிழ மரத்தடியின் கீழ் பிரமாணம் செய்து கொடுத்து, அவரை மணந்த ஐதிகத்தைக் குறிப்பதாம். ஸ்தல விருட்சமாகிய மகிழ மரத்தடியில் சுந்தரமூர்த்தி நாயனாருக்கும், சங்கிலி நாய்ச்சியாருக்கும விவாகமாகி, பிறகு சுவாமி

அவர்களுடன் ஊர்வலம் வருகிறார். சில வருடங்களாக இவ்வூர்வலத்தில் 63 நாயன்மார்களையும் எழுந்தருளப் பண்ணுகிறார்கள். அன்று சாயங்காலத்தில் மகிழ மரத்தில் பாதி இலைகள் இராது; பல பக்தர்கள் அவை களைப் பறித்து விடுவார்கள். [இவ்வுற்சவதினம் நாட்டுக் கோட்டை செட்டிமார், வருகிறவர்களுக்கெல்லாம் அவர் கள்-சத்திரத்தில் அன்னதானம் செய்கின்றனர்.]

**18. திருவையாறு: சப்தஸ்தான உற்சவம்:** இந்த உற்சவம் முக்கியமாக திருவையாற்றில் நடக்கிறது. சப்தஸ்தானம் என்றால் ஏழு இடங்கள் என்று பொருள் படும். இதை ஸப்தஸ்தலம் என்றும் சொல்லுகின்றனர்-ஆனால் சப்தஸ்தானம் என்று கூறுவது தவறாகும். ஐயாற் றில் சுவாமிக்கு சித்திரை மாசம் பிரம்மோற்சவம் முடிந்த வுடன் கடைசி தினம், திருமழபாடியில் நந்திகேஸ்வாருக் குத் திருமணம் முடித்து, அவரை, பஞ்சநதேஸ்வரர், ஊர் கோலமாக ஏழு ஊர்களுக்கு அழைத்துப் போவதாக ஐதிகம். அதிகாலையில் சுவாமி ஓர் பல்லக்கிலும், நந்தி கேசர் மனைவியுடன் ஒரு பல்லக்கிலும் எழுந்தருளி, திருப் பழனம், திருச்சோற்றுத்துறை, திருவேதிகுடி, திருக்கண்டி யூர், திருப்பூந்துருத்தி, தில்லைஸ்தானம் போய் திருவையா றுக்கு மறுநாள் காலை வந்து சேர்வார். சுவாமியின் ஊர் கோலத்துடன் ஆயிரக்கணக்கான பக்தர்கள் சுற்றி வரு வார்கள். அனேக பஜனைகளும் பின்னால் வருவதுண்டு. திருவையாற்றில் வாழ்ந்திருந்த சங்கீத மஹா வித்வான் தியாகராஜ சுவாமிகளும் அவர் காலத்தில் ஸ்வாமிக்குப் பின்னால் பஜனையுடன் வந்துகொண்டிருந்தனர். ஒவ் வொரு ஊருக்கும் சுவாமி போன உடன், அவ்வூர் சிவ மூர்த்தி பல்லக்கில் எழுந்தருளிச் சந்தித்து, அவ்வூரைச் சுற்றி வந்து, மற்றொரு ஊருக்கு வழிவிடுவது வழக்கம். இச்சமயத்தில் ஆங்காங்கு பல இடங்களில் அன்னதானம் முதலிய தானங்கள் ஏராளமாய் நடக்கும். கடைசியாக சுவாமி இரவில் காவிரியைக் கடந்து மறுநாட் காலை ஐயாறு வந்து சேரும் காட்சி மிகவும் ரமணீயமாயிருக்கும்; மிகவும் பார்க்கத்தக்கது.

**திருமயிலை அறுபத்துமூவர் உற்சவம்:** இது பல ஆண்டுகளாக திருமயிலையில்தான் நடத்தப்பட்டு வருகிறது. கபாலீஸ்வரர் கோயிலில் பங்குனி மாசம் பிரம்மோற்சவத்தில் எட்டாவது தினம் இது நடக்கிறது. திருஞான சம்பந்தர் சிவநேச செட்டியாரின் மரித்த பெண்ணாகிய பூம்பாவையரை, உயிர்ப்பித்த ஐதிகத்தைக் குறிப்பதாம். அன்றைத்தினம் திருஞானசம்பந்தருக்குக் குளக்கரையில், அபிஷேகயாகி கோயிலுக்குள் புறப்பாடானவுடன், பூம்பாவையின் அஸ்தியை பல்லக்கில் வைத்து, மறுபடியும் சிவநேச செட்டியாருடன், ஞானசம்பந்தர் குளக்கரைக்குச் சென்று, அங்குள்ள மண்டபத்தில் பூம்பாவைத் திருப்பதிகம் பத்தையும் பாட, குடத்திலிருந்து பெண் எழுந்தது போல் பூம்பாவையரைக் காண்பித்து, பிறகு, ஞானசம்பந்தர் பூம்பாவையுடனும் சிவநேச செட்டியாருடனும் கோயிலுக்கு வர, கபாலீஸ்வரர், அவர்கட்கு அறுபத்து மூன்று நாயன்மார்களுடன் காட்சி கொடுத்து, பிறகு அனைவரும் மாடவீதி வலம் வருவதாக உற்சவம் நடத்தப்படுகிறது. சாயங்காலம் எல்லா மூர்த்திகளுக்கும், பதினாறுகால் மண்டபத்தில் தீபாராதனை ஆவது பார்க்கத் தக்கது. இவ்வுற்சவத்தைப் பார்க்க பதினாயிரக் கணக்கான ஜனங்கள் வருகின்றனர். சில வருடங்களாக இவ்வுற்சவத்துடன் திருவள்ளுவ நாயனார் உற்சவமும் நடைபெறுகிறது.

**திருக்கல்யாண உற்சவம்:** இது சாதாரணமாக எல்லா சிவாலய பிரம்மோற்சவங்களிலும் 10-ஆம் நாள் நடப்பதாம். காஞ்சீபுரத்திலும், மதுரையிலும் நடக்கும் திருக்கல்யாணங்களை மாத்திரம் இங்கு விவரிக்கிறேன்.

**காஞ்சீபுரத்தில்:** காமாட்சியம்மன் அபிஷேக அலங்காரங்கள் ஆகி, கம்பா நதிக்கரையில் எழுந்தருளுவார்கள். பிறகு பரமசிவத்தைக் குறித்து தவம் புரியும் சடங்கு நடத்தப்படும். அதன் முடிவில், ஏகாம்பர நாதர் விருஷப வாகனருடராய் காட்சியளிப்பார். பிறகு இருவருக்கும் மாலை மாற்றும் சடங்கு நடந்தேறும்: (இது வெகு விமரிசையாக இக் கோயிலில் நடத்தப்படுகிறது;

பார்க்கத் தக்கது). பிறகு திருக்கல்யாணம் நடைபெறும் அதன் முடிவில் தங்க ரிஷபத்தில் ஏகாம்பர நாதர் பவனி வருவார்.

**மதுரையில்:** பிரம்மோற்சவத்தின் (சைத்ரோத்சவத்தில்) 9-ஆவது நாள் மீனாட்சியம்மன் திக்விஜயம் நடைபெறும். அதன் முடிவில், சுந்தரேஸ்வரரால் மீனாட்சியம்மன் தோல்வியடையும் லீலை நடத்தப்படும். மறுநாள் உதயம் சுந்தரேசர் கலியாணக் கோலத்துடன் பல மண்டபங்களில் மண்டகப் படியாகி, பிறகு சித்திரை வீதி வலம் வருவார். பிறகு சுவாமி அம்மனுக்கு கன்னி ஊஞ்சலாகி, கலியாண மண்டபத்துக்குட்பிரவேசிக்க, திருக்கலியாணம் நடக்கும், திருப்பரங்குன்றத்து சுப்பிரமணியர் எதிரில். அன்றிரவு சுவாமி வெள்ளி யானை வாகனத்திலும் அம்மன் புஷ்பப் பல்லக்கிலும் மாடவீதி ஊர்கோலம் வருவார்கள். திருக்கலியாணத்தின்போது, குண்டோதரனுக்கு அன்ன மளிக்கும் லீலையும் நடைபெறும்..

**அகஸ்தியருக்கு திருமணக்கோலக் காட்சி உற்சவம்:**

இந்த உற்சவம் புராணக் கதையை ஒட்டியது. பரமசிவத்திற்கும் பார்வதிக்கும் ஹிமய மலையில் விவாகம் நடந்தபோது அதைப் பார்க்க வந்த சகலதேவர் முதலியோருடைய பாரத்தால் பூமியின் வடபாகம் தாழ்ந்ததாகவும், அதைச் சரிப்படுத்த பரமசிவம் அகஸ்தியரை தெற்கே போகும்படி நியமித்ததாகவும், அக்கட்டளைப்படி அகஸ்தியர் தெற்கேவர, உலகின் இருபாகங்களும் சமமான இடைபெற்று முன்போல், சரியானதாகவும் புராணம். அச்சமயம் அகஸ்தியர், தான் மாத்திரம் பரமசிவத்தின் மணக்கோலத்தைப் பார்ப்பதற்கு இல்லையே என்று வருந்த, பரமசிவம் அம் மணக்கோலத்துடன் அகஸ்தியருக்கு தெற்கே காட்சி கொடுப்பதாக வாக்களித்தனராம். இது தான் அகஸ்தியருக்கு மணக்கோலக் காட்சி என்று பெயர். இந்த உற்சவம் திருநெல்வேலி முதலிய க்ஷேத்திரங்களில் வெகு அழகாக நடத்தப்படுகிறது.

**தியாகராஜர் உற்சவம்:** திருவொற்றியூர் திருவான்மியூர் திருக்கச்சூர் முதலிய தியாகராஜரை முக்கியமாக

உடைய கோயில்களில் வருடாந்தர பிரம்மோற்சவம், சற்று வேறு விதமாய் நடக்கிறது.

பிரம்மோற்சவகாலத்தில் மேற்கண்ட ஸ்தலங்களிலெல்லாம், தியாகர், காலையில் புறப்பாடாகிறதில்லை. பகலில் சுவாமி புறப்பட்டால் அப்பட்டணம் எரிந்து போகுமென்பது ஐதிகம். ஆகவே இப்பத்து நாட்களும் தியாகர் இரவில் தான் புறப்படுவார். தனியாக காலைமாலை உற்சவங்களில் சந்திரசேகர மூர்த்தி புறப்பாடாவார்.

தியாகர் புறப்படும்போது, 3 வது, 4வது, 5வது, 6வது, நாட்களில், 3ஆம் பவனி, 4ஆம் பவனி, 5ஆம் பவனி, 6ஆம் பவனி உற்சவம் நடைபெறும். இத்தினங்களில் தியாகர் புறப்பட்டு நந்திஓடை வரையில் வந்து, பிறகு நடனமாடிக்கொண்டே சந்நிதி வீதி புஷ்பப் பந்தல் வரையில் வந்து, அங்கு பவனி நடக்கும். பவனி யென்றால், இதற்கென்று ஒருவிதமாய்க்கட்டப்பட்ட தண்டு கோல்களின் மீது ஆரோகணித்திருக்கும் ஸ்வாமியை இரண்டு பக்கமும் சாய்த்து, ஆடச் செய்வதாகும். 7வது நாள் ரதோற்சவம்-சந்திரசேகருக்குத் தான். 10ஆது நாள் இரவு தியாகருக்குப் பந்தம்பறி உற்சவம் விசேஷம்.

திருவான்மியூரில் கடைசி நாட்களில் வான்மீகநடனம் என்றும் 18 நடனம் என்றும் உற்சவங்கள் நடைபெறுகின்றன. வான்மீக நடனம் வான்மீகி முனிவருக்காக என்பது ஐதிகம்.

**மாச உற்சவங்கள்** : இவைகளுக்கு பஞ்சபர்வ உற்சவங்கள் என்று பெயர். அவையாவன: மாசப் பிரவேசம், பௌர்ணமி, அமாவாசை, கிருத்திகை, பிரதோஷம். சிலர் பௌர்ணமி, அமாவாசை, கிருத்திகை, இரண்டு (?) பிரதோஷங்கள் என்று கூறுகின்றனர். இன்னும் சிலர் அஷ்டமி, சதுர்த்தி, அமாவாசை, பௌர்ணமி, மாசப் பிரவேசம், பஞ்சபர்வங்கள் என்று கூறுகின்றனர்.

இவைகளில் பிரதோஷ உற்சவங்கள் தான் சிவாலயங்களில் முக்கியமானவை. அச்சமயங்களில், பிரதோஷ காலத்தில் நந்தி தேவர்க்கு அபிஷேகம் ஆன பின், சந்திர சேகரமூர்த்தி சிறிய இடபவாகனத்தில் கோயில் உட்பிரா

காரம் சுற்றிவருவார். சூரியன் அஸ்தமிக்குமுன் மூனே முக்கால் நாழிகை முதல், சூரியன் அஸ்தமித்தபிறகு மூனே முக்கால் நாழிகை வரையில், பிரதோஷகால மெனப்படும். கிருஷ்ணபட்சம் திரயோதசி யன்று, இச்சமயத்தில் இவ் வுற்சவம் நடைபெறும். சனிப்பிரதோஷம் விசேஷம் என்பர்.

கிருத்திகை தினங்களில் சுப்பிரமணியர்உற்சவமாகும்.

பௌர்ணமி அமாவாசை தினங்களில் இரவில் சோமாஸ்கந்த மூர்த்தி, சிறிய மாடவீதி சுற்றிவருவார்.

மாசப்பிரவேச உற்சவம்: இவை ஐந்தும் சேர்ந்து பஞ்சபர்வ உற்சவங்கள் என்று பெயர்.

**தேவிபரமாக** பஞ்சபர்வங்கள்: பௌர்ணமி, அமாவாசை, மாச சங்கிரமணம், கிருஷ்ண அஷ்டமி, கிருஷ்ண சதுர்த்தி என்பர். மற்றும் சிலர், பௌர்ணமி, அமாவாசை, மாசப்பிரவேசம், கிருஷ்ணபட்ச அஷ்டமி, சுக்லபட்ச அஷ்டமி, இவை பஞ்சபர்வ உற்சவங்கள் என்பர்.

**நித்யோற்சவம்**: சிலபெரிய சிவாலயங்களில், சாயரட்சை பூஜை ஆனவுடன், சிறிய சந்திரசேகர மூர்த்தியை சிறிய பல்லக்கில் எழுந்தருளச் செய்து கர்ப்பக்கிரஹத்தைச் சுற்றி உற்சவம் நடைபெறும். இதற்கு நித்யோற்சவம் என்று பெயர்.

**வெள்ளிக்கிழமை உற்சவம்**: இது அம்பாள் உற்சவமாகும். ஒவ்வொரு கோயிலிலும் வெள்ளிக்கிழமை (சதுர்ப்புஜ அம்பாள்) என்று ஒரு தேவி விக்ரஹம் உண்டு. அதற்கு சுக்கிரவாரம் சாயங்காலம் உட்பிராகார உற்சவமாகும்.

**கார்த்திகை உற்சவம்**. இது நடந்ததாக திருநெல்வேலி ஜில்லா, அம்பாசமுத்திரத்திற் கடுத்த திருவாலிகர முடையார் கோயில் கல்வெட்டொன்றில் சொல்லப்பட்டிருக்கிறது. இது சுமார் 900 வருடங்களுக்கு முற்பட்டது. இந்த உற்சவம் தற்காலம் எல்லாப் பெரிய சிவாலயங்களிலும் நடைபெறுகிறது. சாயங்காலம் விளக்கு வைக்கும் சமயம் சோமாஸ்கந்தர் புறப்பாடாகி பதினாறுகால் மண்டபம் வந்தவுடன், எதிரில் ஓர் பனைமரத்தைச் சுற்றி ஓலை முத

லியுவைகளை அடுக்கி, அதில் தீப்பற்றச் செய்வார்கள் இது சிவபெருமான், மகாவிஷ்ணுவுக்கும் பிரம்மாவுக்கும் இடையில், ஜோதிலிங்கமாகத் தோன்றிய காட்சியைக் குறிப்பதாகும். திருவண்ணாமலையில் இந்த உற்சவம் வெகு விசேஷம்; அங்கு பிரம்மோற்சவத்தின் கடைசி நாளில் இது நடக்கிறது.

(திருக்குறுக்கை கல்வெட்டொன்றில் வைகாசித்திருநாள் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கி. பி. 985-1018-ல் ஆண்ட ராஜகேசரி வர்மன் காலத்தில் அவர் ஆண்ட 16-ஆம் வருடம் சித்திரைமாசம் 9 நாள் உற்சவம் நடந்ததாக ஒரு கலவெட்டினால் அறிகிறோம். கி.பி. 118-ம் ஆண்டில், மணிமங்கல கல்வெட்டில் அமாவாசை உற்சவம் குறிக்கப்பட்டிருக்கிறது.

தெப்ப உற்சவங்களும், வசந்த உற்சவங்களும், கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டிருக்கின்றன.

ஜடாவர்ம சுந்தரபாண்டியனுடன் அரசு புரிந்த புவனேஸ்வரபாண்டியன் (காலம் கி.பி. 1241—1262) சில சிவாலயங்களில் சாந்தி எனும் திருவிழா நடத்தியதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

திருஒற்றியூர்: கல்வெட்டுகளில் அடியிற்கண்ட உற்சவங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன:—

பங்குனி உத்திர உற்சவம், மாசிமக உற்சவம் ஆவணி மூல உற்சவம் மார்கழி திருவாதிரை உற்சவம் உத்தராயணச் சிறப்பு உற்சவம் )

இவைகளை ஐந்தாம்பக்கம், 29- ஆம் வரியின் கீழ் சேர்த்துப் படிக்கவும். இவை தவறாக இங்கு அச்சிடப்பட்டது.

**தெப்போற்சவம்:** பெரிய குளங்கள் இருக்கும் சிவஸ்தலங்களிலெல்லாம் இத்தெப்போற்சவம் நடைபெறுகிறது. பெரிய தெப்பத்தைக் கட்டி அதில் ஸ்வாமியை எழுந்தருளச் செய்து, குளத்தைச் சுற்றி இரவில் ஒன்று முதல் ஏழுவரை வருதலே இந்த உற்சவமாம். இது சாதாரணமாக தை மாசத்தில் பூச நட்சத்திரத்தில் நடைபெறுகிறது. இந்த தெப்போற்சவம் மிகவும் விசேஷமாகக் கொண்டாடப்படுகிறது. மதுரையில் வண்டியூர்

தெப்பகுளத்திலாம். வண்டியூர் தெப்பக்குளம் தென் இந்தியாவிலுள்ள ஓர் மிகவும் பெரிய தெப்பக்குளமாம்; அச்சமயத்தில் குளத்தின் நான்கு பக்கத்திலும் ஆயிரக்கணக்கான விளக்குகள் ஏற்றப்படுவது கண்கொண்ட காட்சியாகும்.

பெரிய காஞ்சீபுரத்தில் இந்த தெப்போற்சவம் வைகாசி மாசம் நடைபெறுகிறது சர்வதீர்த்த குளத்தில் —3 நாட்கள்.

**கிரிப்பிரதட்சிண உற்சவம்:** மலையருகிலுள்ள சில சிவாலயங்களில் கிரிப்பிரதட்சிண உற்சவம் நடக்கிறது— உதாரணமாக திரு அண்ணாமலையில் 10 நாள் பிரம்மோற்சவம் கழிந்தவுடன் ஒரு நாள் இவ்வுற்சவம் நடைபெறுகிறது. திருக்கழுக்குன்றத்தில் 3-ஆம் நாள் அதிகாரநந்தி உற்சவம் கிரிப்பிரதட்சிணமாக நடைபெறுகிறது.

**வசந்தோற்சவம்:** இது ஏறக்குறைய எல்லா சிவாலயங்களிலும் நடைபெறுகிறது. வசந்தகாலமாகிய சித்திரை வைகாசி மாசங்களில், பத்து நாள் உற்சவம் நடைபெறும். வசந்த மண்டபம் வேறாக இருக்கும் கோயில்களில், அம்மண்டபங்களை நன்றாய் அலங்கரித்து, நடுவில் குளத்தைப் போல், தண்ணீரைத் தேக்கி, சுவாமி அதைச் சுற்றி 3 முதல் 9 முறை வரை, விதம் விதமான வாத்தியங்களுடன் சுற்றி உலாவி வருவார். பிறகு பிரசாத விநியோகம் ஆகும். கடைசி நாள் விடி உற்சவமாகும். வசந்த மண்டபம் வேறாக இல்லாத சிவாலயங்களில், கோயிலுக்குள்ளேயே ஒரு புறம் மேற்கண்டபடி அலங்கரித்து சுற்றி உலாவல் அங்கே நடக்கும். திருக்கழுக்குன்றத்தில் இவ்வுற்சவம் பிரபலம்.

**நவராத்திரி உற்சவம்:** இந்த உற்சவம் சிவாலயங்களில் தேவிக்கு மாத்திரம்தான். இது புரட்டாசி மாசம் அமாவாசை துவக்கி சரஸ்வதி பூஜை வரையில் 9 நாட்களும், அம்மனுக்கு சாயங்காலங்களில் விதம் விதமாக அலங்காரம் செய்து தீபாராதனை நடத்துவதாகும். விஜய தசமியன்று பார்வேட்டை உற்சவம் மாடவீதிகள் ஊர்

வலம் நடைபெறும். சில சிவாலயங்களில் விஜயதசமி யன்று அம்புபோடுவதற்காக சுவாமியும் புறப்பாடாவ துண்டு இதை சாதாரணமாக பார்வேட்டை உற்சவம் என்பார்கள். சரியான பெயர் பாடி வேட்டை என்பதாம்.

**பவித்ரோற்சவம்;** இது ஆவணி மாசம் சாதாரணமாக நடக்கிறது. வருடாந்தர பூஜையில் ஏதேனும் குறைகள் இருந்தால், அவைகளுக்குப் பிராயச்சித்தமாக நடத்தப்படும் உற்சவம். ஐந்து நாள் அல்லது மூன்று நாள் நடத்தப்படுகிறது. "பவித்ரம் பாபநாஸனம்" என்பதைக் காண்க.

**ஆடிபூர உற்சவம்:** சிவாலயங்களில் இது தேவிக்கு மாத்திரம், ஆடி மாசத்தில் 10 நாள் நடத்தப்படும் உற்சவம். சில பெரிய கோயில்களில் 10 நாளும் தேவிக்கு வாஹன உற்சவமும் நடத்தப்படுகிறது. இவ்வுற்சவம், திருவையாறு, நாகப்பட்டணம், திருவிடைமருதூர், மாயவரம், வேதாரண்யம், வைத்தீஸ்வரன் கோயில், திருவாரூர் முதலிய இடங்களில் பிரபலமாக நடத்தப்படுகிறது.

**சந்திப்பு உற்சவம்:** இது ஓரிடத்தில் பல சிவாலய உற்சவமூர்த்திகள் சந்திக்கும் உற்சவமாம். இது முக்கியமாக திருவேற்காட்டில் சித்திரா பௌர்ணமியன்று நடைபெறுகிறது. இதற்கு திரு ஊறல் உற்சவம் என்றும் பெயர். ஆற்றின் நடுவில் ஓர் ஊறலை உண்டாக்கி அலங்கரித்து அதைச்சுற்றிப் பல உற்சவமூர்த்திகளும் பத்தி உலாவுவது வழக்கம். சென்னைப்பட்டணத்தில் மார்கழி மாதம் ஆருத்திரா தினம் சென்னையிலுள்ள ஏறக்குறைய எல்லா நடராஜ மூர்த்திகளும் சந்திக்கின்றனர். இதர சிவாலயங்களிலுள்ள விநாயகர், சுப்பிரமணியர், காளி அம்பாள் முதலிய மூர்த்திகளும் சந்திக்கின்றனர்.

**சந்திப்பு உற்சவம்:** என்பது இன்னொரு விதமாகவும் கொண்டாடப்படுகிறது. இது பொன்னேரியில் நடைபெறுகிறது. இங்குள்ள சிவாலயத்து ஈஸ்வரர், விருஷப வாகனத்திலும், பெருமாள் கோயில் விஷ்ணுமூர்த்தி கருட

வாகனத்திலும், ஆற்றின் நடுவில் சந்திக்கும் உற்சவமாம். ஒரே காலத்தில் இரண்டு மூர்த்திகளுக்கும் தீபாராதனை ஆகிறது பார்க்கத்தக்கது. இம்மாதிரியான சந்திப்பு உற்சவம் சென்னைக்கடுத்த கோமும்பேட்டிலும் நடைபெறுகிறது; மீஞ்சூரிலும் நடைபெறுகிறது.

**மெத்தைஉற்சவம்;** இது இப்பதம் குறிக்கிறபடி மெத்தையின் மீது சுவாமியை ஆரோகணித்து, உற்சவம் நடத்துதலாம். காஞ்சீபுரத்தில் இது வைகாசி மாசம் நடைபெறுகிறது. 9 நாள் உற்சவம்.

**அன்னபிஷேக உற்சவம்.** இது ஐப்பசிமாசம், நடைபெறுவதாம்; லிங்கத்திற்குளகிரில்திருப்பாவாடையாக அன்னம் சமர்ப்பிக்கப்பட்டு, நிவேதனமாகும். திருவொற்றியூரில் இந்த உற்சவம் விசேஷம். இச்சமயம் பிருத்விலிங்கத்தின் மீதிருக்கும் கவசம் களையப்பட்டு, தரிசனமளிக்கப்படும்.

**கும்பாபிஷேக உற்சவம்:** இது பல வருடங்களுக்கு ஒரு முறை தான் நடத்தப்படும் உற்சவம். ஆகமப்படி 60 ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது கும்பாபிஷேகம் செய்யவேண்டுமென்று சொல்லப்படுகிறது. இடையில் ஏதாவது மூலஸ்தானங்கள் புதிதாய் ஏற்பட்டாலும், அல்லது மராமத்து செய்யப்பட்டாலும், கோபுரங்கள் முதலியன கட்டப்பட்டாலும், மூல விக்கிரகங்களின் அஷ்டபந்தனங்கள் கிலமாகி அசைவுற்றாலும், அவைகளுக்குத் தக்கவாறு, கும்பாபிஷேகம் செய்யவேண்டும். மஹாகும்பாபிஷேகம் நடப்பதென்றால் கோயில் முழுதும் மராமத்து செய்யப்பட்டு, மூலவிக்கிரகங்களுக்கும் உற்சவ விக்கிரகங்களுக்கும் கும்பாபிஷேகம் செய்வதாம்: இதில் பல கலச ஸ்தாபனங்கள் செய்து, தினந்தோறும் யாகம் நடத்தி, கடைசி நாள், அக்கும்பங்களிலுள்ள தீர்த்தங்களால் மேற்கண்ட விக்ரஹங்கள் முதலியவைகளை சுத்தி செய்வதாகும் (கும்பம்—கலசம்).

**சஷ்டி உற்சவம்:** இது சுப்பிரமணியருக்கு உரியது. ஐப்பசி மாதம் 6 நாட்கள் உற்சவம். திருவையாறு, சிக்கல், திருப்பரங்குன்றம், குன்றக்குடி முதலிய இடங்களில்

விசேஷமாக நடத்தப்படுகிறது. உற்சவக் கடைசியில் சூரசம்மாரம், பிறகு தெய்வயானை வள்ளியம்மன் திருமணம் நடைபெறும்.

**திறைபணி காட்சி உற்சவம்:** எல்லா பதார்த்தங்களையும் வைத்து சிவபெருமானை இந்திரன் பூசித்த ஐதிகம். இது திருஆரூரில் முக்கியமாகக் கொண்டாடப் படுகிறது. இதை திருமயிலை முதலிய இடங்களிலும் ஆரம்பித்து உள்ளார்கள். இது புரட்டாசி மாதம் பௌர்ணமிதினம் நடைபெறுகிறது.

**டோலோத்ஸவம்:** மார்கழி மாசம். இது தஞ்சாவூரில் விசேஷம். உற்சவமூர்த்தியை ஊஞ்சலில் எழுந்தருளச் செய்து, கீதத்துடன் அதை ஆட்டிக் கொண்டாடுவதாகும்.

**விநாயக சதுர்த்தி உற்சவம்:** இது ஆமணி மாசம் எல்லா சிவாலயங்களிலும் நடத்தப்படும். விநாயகருக்கு அபிஷேகம் அலங்காரம் நிவேதனமாகி, வெளி உற்சவமாகும்.

மதுரையில் முக்குறுணி விநாயகருக்கு, மூன்று குறுணி நெல்லைக்கொண்டு ஒரே மோதகமாக்கி, நிவேதனம் செய்வது பார்க்கத் தக்கது.

**சங்காபிஷேக உற்சவம்:** இது 108 அல்லது 1008 சங்கங்களில் தீர்த்தம் விட்டு பூசித்து, ஸ்வாமிக்கு அபிஷேகம் செய்வதாகும். இச்சங்கங்கள், வலம் புரிச் சங்கங்களாய் இருந்தால் மிகவும் விசேஷமாகும். இது பல தேவாலயங்களில் வெவ்வேறு தினங்களில் நடத்தப்படுகிறது. திருக்கழுக்குன்றத்தில் கார்த்திகை மாசம் கடைசி சோமவாரம் நடத்தப்படுகிறது. திருக்கடையூரில் கார்த்திகை சோமவாரங்களில் நடைபெறுகிறது.

**அறைக்கட்டு உற்சவம்:** மதுரை முதலிய சில பெரிய சிவாலயங்களில் இந்த உற்சவம் உண்டு. மார்கழி மாதம் திருவாதிரை நாளுக்கு முன்பாக, பத்து நாட்கள், கோயில் தாசிகள் மண்டபங்களில் அறைகளாகத் தடுத்து, அவரவர்கள் இச்சைப்படி அலங்காரம் செய்து வைப்பார்கள். இரவு சுவாமி புறப்பாடாகி இவ்வறைகளுக்கு

எதிரில் தீபாராதனை பெற்றுப் போவார். இது தற்காலம் நிறுத்தப்பட்டிருக்கிறது.

**கோலாட்ட உற்சவம்:** கோயில் தாசிகள் ஸ்வாமி எதிரில் கோலாட்டம் போடுவார்கள். இது மதுரையில் விசேஷமாக நடத்தப்படுகிறது. திருமயிலையில் ஆருத்திராவிற்கு முன்பு மூன்று நாள் இவ்வுற்சவம் நடத்தப்படுகிறது. கோயில்களில் தாசிகள் நிறுத்தப்பட்ட படியால் இந்த உற்சவமும் நிறுத்தப்பட்டிருக்கிறது.

**எண்ணெய்க்காப்பு உற்சவம்:** மதுரையில் மார்கழி மாசம் நடைபெறுகிறது; இது மீனாட்சி அம்மனுக்கு மாத்திரம்.

**நடராஜர் அபிஷேகம்:** இது சிதம்பரத்தில் தான் மிகவும் விசேஷமாக நடத்தப்படுகிறது. ஒரு வருஷத்தில் நடராஜருக்கு 6 அபிஷேகங்கள் முக்கியம்; அவை:—

1. **மார்கழி திருவாதிரை;** உதயாதி காலை உற்சவம் சுமார் 6 மணி.

2. **மாசி வளர்பிறை சதுர்த்தி,** காலை சந்தி சுமார் 7 மணி.

3. **சித்திரை திருவோணம்,** உச்சிகாலம், பகல் 11 மணி.

4. **ஆனி உத்திரம்,** பிரதோஷகாலம், மாலை சுமார் 5 மணி.

5. **ஆவணி வளர்பிறை சதுர்த்தசி,** சாயரட்சை, சுமார் 7 மணி.

6. **புரட்டாசி வளர்பிறை சதுர்த்தி,** அர்த்தஜாமம், சுமார் 10 மணி.

இவைகளில் ஆனி திருமஞ்சனமும், ஆருத்திரா திருமஞ்சனமும் விசேஷம்.

**மஹாசிவராத்திரி உற்சவம்:** இது எல்லா சிவாலயங்களிலும் கொண்டாடப்படும். பெரிய சிவாலயங்களில் இரவு 6 கால பூஜை நிறைவேறும். ஸ்ரீ காளஹஸ்தியில் இது மிகவும் விசேஷம்; கோயில் பிரம்மோற்சவத்துடன் சேர்ந்துவருகிறது. வடக்கிலுள்ள சிவாலயங்களில் எல்லாம் இது நடைபெறுகிறது.

**சூரிய பூஜை:** இது வருஷத்தில் மூன்று நாட்கள் சூர்யரஸ்மியானது கர்ப்பக்கிரஹத்திலுள்ள லிங்கமூர்த்தியின்பேரில் நேராக விழுவதாம். இது காலைப்போதில்தான் நேரிடும்; கோயிலை நிர்மாணித்த சிற்பியின் சாமர்த்தியத்தினால் இது நேரிடுகிறது. சென்னைக்கடுத்த பூவிருந்தவல்லியிலுள்ள வைத்தீஸ்வரன் கோயிலில் இது நடைபெறுகிறது. இன்னும் மற்ற சிவாலயங்களிலும் உண்டு.

**மாணிக்கவாசகர் உற்சவம்:** இது திருக்கழுக்குன்றத்தில் ஆனி மாசம் நடக்கிறது. மயிலை முதலிய பல ஸ்தலங்களில் ஆருத்திராவை ஒட்டி, முன்னதாக 10 நாள் உற்சவம் நடைபெறுகிறது. திருப்பெருந்துறையில், 10 நாள் பிரம்மோற்சவத்தைப்போல் கொண்டாடப்படுகிறது. பல சிவாலயங்களில் மார்கழி மாசம் ஆருத்திராவுக்கு முன்பாக 10 நாள் பல்லக்கு உற்சவமாக நடைபெறுகிறது.

**சுந்தரமூர்த்தி நாயனார் உற்சவம்:** பெரிய சிவாலயங்களில் இவர் திருநட்சத்திர உற்சவம் நடைபெறுகிறது. அன்றியும் சில சிவாலயங்களில், அதற்கு முன்பாக இவரது கலியாணம் முதலிய உற்சவங்கள் நடத்தப்படுகின்றன.

**திருஞான சம்பந்தர் உற்சவம்:** இவர் திருநட்சத்திர தினம் பெரும்பாலும் நடைபெறுகிறது.

**திருநாவுக்கரசு சுவாமிகள் உற்சவம்:** இவர் திருநட்சத்திர தினம் பெரியசிவாலயங்களில் நடைபெறுகிறது.

**நாயன்மார்கள் உற்சவங்கள்:** அவர்கள் பிறந்த அல்லது முக்தியடைந்த நட்சத்திரங்களில் நடத்தப்படுகின்றன.

**சேக்கிழார் உற்சவம்:** வைகாசி மாசம். இது முக்கியமாக குன்றத்தூரில் 10 நாட்கள் கொண்டாடப்படுகிறது. சென்னையில் சில சிவாலயங்களிலும் கொண்டாடப்படுகிறது.

**பதினொரு திருமுறை உற்சவம்:** இது புதிதாய் ஏற்பட்ட உற்சவம். சென்னையில் பல சிவாலயங்களில்

பதினொரு திருமுறைகளை வெள்ளிச்சப்பரத்தில் வைத்து உற்சவம் செய்து வருகிறார்கள். அன்று நால்வர்க்கும் அபிஷேகம் முதலியன செய்யப்படுகின்றன.

மாசிமக உற்சவம்: மாசிமக நட்சத்திரத்தின் போது சிவாலய மூர்த்திகள் கடல் சமீபமாயிருந்தால், கடற்கரைக்குக் கொண்டு போகப்படுகின்றன. கடற்கரை யில்லாத ஊர்களில், ஆறுகளுக்கோ, குளங்களுக்கோ, கொண்டு போகப்படுகின்றன. பிரம்மோற்சவத்தில், தீர்த்தவாரியில் நடைபெறுவதுபோல் அஸ்திரராயர் ஜலத்தில் மூழ்கி ஸ்நானம் செய்விக்கப்படுவார்.

**வைசாகபௌர்ணமி உற்சவம்:** பெரிய சிவாலயங் களில் எல்லாம் இன்று ஆறுமுக ஸ்வாமிக்கு அபிஷே கமும், வீதி உற்சவமும் உண்டு. ஆறுமுகஸ்வாமி உற்ச வத்தில், இரண்டு புறமும் மேளதாளங்கள் முதலியன உண்டு. எல்லா சுப்ரமண்ய ஸ்தலங்களிலும் இது விசேஷ உற்சவமாகக் கொண்டாடப்படுகிறது.

**கார்த்திகை சோம வாரங்கள் உற்சவம்:** இது எல்லா பெரிய சிவாலயங்களிலும் நடைபெறுகிறது. இம் மாதம் வரும் நான்கு அல்லது ஐந்து சோம வாரங்களில் ஸ்வாமிக்கு விசேஷ அபிஷேகமாகி, கோயில் முழுவதும் விளக்குகள் ஏற்றப்படும். பல பக்தர்கள் மா விளக்கும் ஏற்றுவார்கள்.

**வனபோஜன உற்சவம்:** உற்சவமூர்த்தியை அரு காமையிலுள்ள தோட்டத்திற்குக் கொண்டுபோய் காலையில் அபிஷேகம் செய்வித்து, சாயங்காலம் ஊர்வலமாகக் கொண்டுவந்து, ஆஸ்தானம் சேர்ப்பித்தலாம். மைலாப் பூரில் இவ்வுற்சவம் தைமாசம் சுப்பிரமணிய ஸ்வாமிக்கு நடத்தப்படுகிறது. ஆதியில் கபாலீஸ்வரருக்கே நடத்தப் பட்டது.

**நித்திய பூஜை:** சிவாலயங்களில் ஆகமப்படி நித்ய பூஜை நான்கு காலங்களில் தான் குறிக்கப்பட்டிருக் கின்றது.

பூர்வாங்கம் காலசந்தி, 6 மணி முதல் 9-மணி வரை யிலும்.

(தற்காலத்தில் உதய மார்த்தாண்டமும் விளாப் பூஜையும் இதிலடங்கியது)

உச்சிகாலம்—காலை 10 மணி முதல் 1 மணி வரையிலும்.

சாயரட்சை, மாலை 4½ மணி முதல் 7 மணிவரையிலும்

அர்த்தஜாமம்-இரவு 9மணிமுதல் 10 மணிவரையிலும். உச்சிகாலம் மத்தியானம் 12 மணிக்குத்தான் இருக்க வேண்டும்; அர்த்த ஜாமம் இரவு 12 மணிக்குத்தான் இருக்கவேண்டும். தற்காலம் கோயில்களில் வழிபடுவோர்களுடைய சௌகரியத்தை ஒட்டி கொஞ்சம் மாற்றப்பட்டிருக்கிறதுபோலும்.

சில பெரிய கோயில்களில் 5 கால பூஜையும், 6 கால பூஜையும் செய்யப்பட்டு வருகிறது.

**குறிப்பு:** இச்சிறு நூலில் பல முக்கிய உற்சவங்கள் விடப்பட்டிருக்கலாம்; அவைகளை சிவ பக்தர்கள் தெரிவித்தால், இரண்டாம் பதிப்பில் சேர்த்து, சிவபெருமான் திருவருளால் அச்சிடப்படும்.

---

இச்சிறு நூல்

**என் தந்தை தாயார்**

**ப. விஜயரங்க முதலியார்**

**ப. மாணிக்கவேலம்மாள்**

**ஞாபகார்த்தமாக அச்சிடப்பட்டது.**

---

அருட்பெருஞ்ஜோதி அச்சகம், சென்னை—1. 9—1949.